THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

THIRTY-THIRD SESSION OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

Tuesday, the 25th March 1969.

The House met in the Council Chamber, ***Fort St. George***, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru M. A. Manickavelu) in the Chair.

1. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. CHAIRMAN : We will take up question 203 first.

Government Headquarters Hospital, Ramanathapuram.

* 203 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether any representation has been received from the Ramanathapuram Municipality, urging the continuance of Honorary Specialist Doctors in the Government Headquarters Hospital, Ramanathapuram; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) ஏற்கனவே இக் கௌரவ பதவிகள் ஊதியம் பெறும் உதவி மருத்துவ அதிகாரிகள் பதவிகளாக மாற்றப்பட்டு விட்டமையால் இராம நாதபுரம் நகராட்சி மன்றத்தின் வேண்டுகோளை நிறைவேற்ற முடிய வில்லை.

Siddha Dispensary in Tamil Nadu Secretariat.

* 204 Q.—THIRU N. R. THIAGARAJAN : **Will the** Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the average daily number of persons who have undergone treatment at the Siddha dispensary in the Tamil Nadu Secretariat from the date of its inception till 31-3-1968; and

(*b*) the diseases for which treatment is given?

தலைமைச் செயலக சித்த மருத்துவ மனை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழக தலைமைச் செயலகத்தில் உள்ள சித்த வைத்திய ஆஸ்பத்திரியில் ஆரம்பித்த நாள் முதல் 31—3—1968 வரை சராசரி ஒரு நாளைக்கு எத்தனை பேர் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் ?

(இ) என்ன வகை வியாதிகளுக்கு வைத்தியம் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) 140

(இ) எல்லாவித வியாதிகளுக்கும்.

(1) முக்கியமாக குன்மம், நீரழிவு, தோலைப்பற்றிய சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற வியாதிகள், காசம், சுவாசகாசம், சூதகவாயு, வெட்டை, வெள்ளை போன்றவைகள், இங்கு பிணி நீக்கம் செய்யப்படுகின்றன.

(2) கண், காது, மூக்கு, தொண்டை ஆகியவைகளில் ஏற்படும நோய்களுக்கும் சித்த மருத்துவ முறையில் பிணி நீக்கம் செய்யப்படுகிறது.

Mosquito Nuisance

* 205. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of rivulets, streams, ponds and theppams in the City of Madras besides Adayar, Cooum and Buckingham Canals;

(*b*) whether the Government are aware of the fact that mosquitoes breed in these places as a result of stagnation of water;

(*c*) if so, whether there is any scheme to prevent this stagnation; and

(*d*) the details thereof?

கொசுத் தொல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை நகருக்குள் அடையாறு, கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் தவிர இன்னும் எத்தனை சிற்றாறுகள், ஓடைகள், சிறு குளங் கள், தெப்பங்கள் இருக்கின்றன ?

(இ) இந்த இடங்களில் நீர் தங்குவதால் கொசு உற்பத்தியாகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், இதைத் தவிர்க்க ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(எ) அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) சென்னை நகருக்குள் அடையாறு, கூவமாறு, பக்கிங்காம் கால்வாய் தவிர சிற்றாறுகள் ஏது மில்லை. கழிவு நீர், ஓடைகள் இரண்டு உள. சிறு குளங்கள் நாற்பது உள. குட்டைகள் சற்றேறக்குறைய எண்ணூறுக்கு மேற்பட்டிருக்கும்.

(இ) ஆம்.

(உ). (எ) : பின்வரும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன—

கழிவு நீர் ஓடைகள் : கரை ஓரங்களில் படர்ந்திருக்கும் செடிகொடிகள் புற்பூண்டுகள், குப்பை கூளங்கள், பாசைகள் முதலானவற்றை அகற்றி வாரம் ஒருமுறை மருந்தடிக்கப் படுகின்றன.